**செய்தி வெளியீடு எண்: 808** **நாள்: 04.11.2018**

**தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு துரைமுருகன் 3.11.2018 நாளிதழ்களில் வெளியிட்ட செய்திக்கு மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார் அவர்களின் கண்டன அறிக்கை.**

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு துரைமுருகன் அவர்களின், "கிருஷ்ணா நீரைத் தேக்கி வைக்க தனியார் நிலம் கையகப்படுத்தாததால் நீர்த்தேக்கம் அமையாமல் 186 கோடி ரூபாய் பாழ்" என்ற ஒரு பொய்யான அறிக்கை இன்றைய நாளிதழில் வெளியாகி உள்ளது. ஒமந்தூரரார் அரசினர் தோட்ட வளாகத்தில், திமுக ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலக கட்டிடத்தில் நடைபெற்ற 400 கோடி ரூபாய் ஊழலை விசாரிக்க உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கினை திசை திருப்பும் நோக்கில் இந்த அறிக்கையை அவர் வெளியிட்டுள்ளார். திரு துரைமுருகனின் அறிக்கை ஒரு பொய்யான, முகாந்திரம் இல்லாத ஒரு வெற்று அறிக்கை.

**தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திட்டம்**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சென்னை பெருநகர குடிநீர் தேவையை நிரந்தரமாக பூர்த்தி செய்ய, 1000 மி. கன அடி கொள்ளளவில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன் கோட்டை கிராமத்தின் அருகே தேர்வாய் கண்டிகை மற்றும்

கண்ணன் கோட்டை ஆகிய இரண்டு கண்மாய்களை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்க ஜனவரி 2012–ல் அரசாணை வெளியிடப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு சென்னை பெருநகரத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய அமைக்கப்படும் புதிய நீர்த்தேக்கம் இதுவேயாகும். முன்பு வீராணத் திட்டம் ஒன்றை உருவாக்கி அதனை செயல்படுத்தாமல், ஊழலுக்கு வித்திட்டது தி.மு.க. ஆட்சி தான். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தான் புதிய வீராண திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தி சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவை வேகமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. தொலைநோக்குப் பார்வையில் வளர்ந்து வரும் சென்னை பெரு நகரத்தின் குடிநீர் தேவையைக் கணக்கில் கொண்டு தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்க திட்டப்பணி செப்டம்பர் 2013–ல் துவங்கப்பட்டு, அதற்கான 1485 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நில உரிமையாளர்கள், புதிய நில எடுப்பு சட்டத்தின்படி கூடுதல் தொகை வழங்க வேண்டி, வழக்கு தொடர்ந்ததால், பணிகள் காலதாமதமானது. இருப்பினும், இன்றைய நிலையில் வழக்குகள் முடிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் 100%, நீர்தேக்க கட்டுமானப் பணிகள் 65% முடிந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் இவ்வரசு நில எடுப்பு பணிகளை உரிய முறையில் முடித்து, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் திட்டங்களை முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், 2008 ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் திரு. துரைமுருகன் பொதுப்பணித் துறை

அமைச்சராக இருந்தபோது, நில எடுப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலையிலும், சுற்றுச்சூழல் தடைநீக்கச் சான்று பெறப்படாமலும் அவசர கதியில் பணிகள் ஆரம்பிக்க ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டமானது துவங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பிற்கு வந்த பின்னரே சுற்றுச்சூழல் தடைநீக்கச் சான்று பெறப்பட்டு, முழு வீச்சில் நில எடுப்புப் பணிகள் மற்றும் கால்வாய் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திமுக ஆட்சியின் அரைகுறை வேலைக்கு மற்றும் ஒரு உதாரணம், சென்னை அடையாறு ஆற்றின் குறுக்கே தரப்பாக்கம் மற்றும் அனகாபுத்தூர் பகுதிகளை இணைத்து புதிய பாலம் கட்ட 4.1.2008 ஆரம்பிக்கப்பட்டது. இந்த பாலத்தின் சில தூண்கள் இந்திய விமானப்படை நிலத்தில் வருவதால், பாலம் பாதியில் நின்றது.

மத்திய அரசில் 10 ஆண்டுகளுக்கும் மேல் அங்கம் வகித்த திமுக, இதற்கான உரிய அனுமதியை பெற தவறிவிட்டது. கால தாமதத்தால், அரசு பணம் விரயமாகி உள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, இப்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது போன்ற பல்வேறு நிர்வாக குழப்பங்களுக்கு திமுக அரசு காரணமாக இருந்த நிலையில், இன்று அவர்கள் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நிலம் கையப்படுத்திய பின்னரே ஒப்புதல் வழங்கியது போன்ற ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்கி அறிக்கை அளித்துள்ளது வேடிக்கையாக உள்ளது.

**திருக்கண்டலம் தடுப்பணை**

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அடுத்த திருக்கண்டலம் கிராமத்தில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் 1 TMC கொள்ளளவில் அமைக்க 1982–ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு சுமார் 1400 ஹெக்டேர் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டது. நில உரிமையாளர்கள் தங்களுடைய நிலங்களை கையகப்படுத்துவதை எதிர்த்து போரட்டங்கள் நடத்தியதன் விளைவாக இத்திட்டம் கைவிடப்பட்டது. பின்பு 2012–ஆம் ஆண்டில் ரூ.35 கோடி செலவில் ஒரு தடுப்பணை கட்ட உத்தேசிக்கப்பட்டது. 2012ம் ஆண்டில், 195 மீட்டர் அகலமுள்ள கொசஸ்தலையார் குறுக்கே 175 மீட்டர் நீளத்தில் ஒரு தடுப்பணை கட்டுவதற்காக தலைமைப்பொறியாளர் ஆய்வுக்குப்பின்பு ரூ.32.90 கோடிக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, ரூ.28.19 கோடிக்கு குறைந்த புள்ளி கேட்ட ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 2014ல் இந்தப்பணி முழுமையாக முடிக்கப்பட்டது.

2015–ஆம் ஆண்டு கொசஸ்தலையாற்றில் சுமார் 83000 கன அடி வெள்ள நீர் சென்ற பொழுது அருகில் உள்ள பட்டா நிலங்கள் வழியாக உபரி நீர் புகுந்து மண் அரிப்பு ஏற்படுத்தி மீண்டும் ஆற்றின் வழியே சென்றது. திரு துரைமுருகன் கூறுவது போல 1966ல் கொசஸ்தலையாற்றில் 92,260 கன அடி வெள்ள நீர் சென்றது என்பது தவறாகும். 59,760 கன அடி மட்டுமே வெள்ள நீர் சென்றது. இதைக் கருத்தில் கொண்டு தான் இந்த தடுப்பணை

116 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் வெள்ள நீர் விநாடிக்கு 65,000 கன அடி அளவு நீர் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிய பின்னர் தான் அதற்குண்டான தொகையை அப்பணிக்கு வழங்கி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் இறுதி செய்வது என்ற நடைமுறை பொதுப்பணித்துறைக்கு அமைச்சராக இருந்த திரு துரைமுருகன் அவர்களுக்கு தெரியாதது வேடிக்கையாகவும், வினோதமாகவும் உள்ளது. 65000 கன அடி வெள்ள நீர் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த தடுப்பணையில், 2015–ல் வரலாறு காணாத மழை பெய்து, மிக அதிக அளவான வெள்ள நீர் விநாடிக்கு 83000 கன அடி சென்றதாலும், 100 ஆண்டுக்கு ஒரு முறை ஏற்பட்ட இயற்கை சீற்றத்தின் காரணமாகவும் இந்த தடுப்பணை சேதமடைந்தது. உண்மை இவ்வாறு இருக்க, திரு.துரைமுருகன் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளார்.

இவ்வெள்ளத்தில் சேதமடைந்த இந்த தடுப்பணையினை சரிசெய்ய ஏற்கனவே ரூ.9 கோடி நிதி ஒதுக்கப்பட்டதாக திரு.துரைமுருகன் தெரிவித்த செய்தி தவறானதாகும். இந்த பெரு வெள்ளத்தில் சேதம் அடைந்த இந்த தடுப்பணையை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவர ரூ.18.17 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 1,20,000 கன அடி வெள்ள நீர் செல்லும் வகையில் மறு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளது.

**1971–1976–**ல் திமுக ஆட்சியிலிருந்தபோது திண்டுக்கல் மாவட்டத்தில் குடகனாறு அணை கட்டப்பட்டு அப்போது ஏற்பட்ட வெள்ளத்தில் அணை உடைந்தது. அதேபோல் **1974** ஆம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்து கட்டப்பட்ட திருச்சி முக்கொம்பில் உள்ள காவேரி கதவணையில் ஒரு தூண் சேதமடைந்து பின்னர் திமுக அரசால் சரிசெய்யப்பட்டது. இயற்கை சீற்றங்களின் காரணமாக சில தருணங்களில், நீர்த்தேக்க கட்டுமானங்களில் பாதிப்பு ஏற்படுகிறது. காரணம் கண்டறியப்பட்டு சீர் செய்யப்படுகிறது. நிலைமை இவ்வாறு இருக்க, திமுக ஆட்சியின் தவறுகளை மறைக்க, முற்றிலும் உண்மைக்குப் புறம்பான அறிக்கையை திரு.துரைமுருகன் வெளியிட்டிருப்பது வேடிக்கையாகவும், வியப்பாகவும் உள்ளது.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**